# செங்கம் தேர்வுநிலை பேரூராட்சி

## திருவண்ணாமலை மாவட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண்.327/2021/அ1** **நாள் : 13.04.2022**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தேர்வுநிலை பேரூராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் (தூய்மை இந்தியா இயக்கம் 2.0) **(Solid Waste Management 2021-2022)** கீழ்கண்ட வேலைகளை செய்து முடிக்க செங்கம் பேரூராட்சியில் பதிவு செய்துள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் செங்கம் பேரூராட்சி அலுவலகத்தில் **12.05.2022** ம் தேதி புதன்கிழமை பிற்பகல் **3.00** மணி வரை செங்கம் பேரூராட்சி செயல் அலுவலர் (அல்லது) அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் **3.30** மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலிக்கப்படும். ஒப்பந்தபுள்ளி படிவங்களை இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் அல்லது ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் **11.05.2022** ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் **5.00** மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

## திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021 – 2022

**(Solid Waste Management Scheme – Bio Mining )**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சம்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி படிவம் தொகை (ரூ) | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | செங்கம்–பரமனந்தல் சாலையில் உள்ள வளமீட்பு பூங்காவில் உள்ள பழைய கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் (Bio Mining) பணிகள் மேற்கொள்ளுதல். | **41.40** | 41,400 | 10620 | 180 நாட்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் .
2. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பணிகளில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும் .
3. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்ததாரர் இறுதியாக பெறப்பெற்ற வருமான வரி மற்றும் விற்பனை வரி சான்றினை இணைக்க வேண்டும்.
4. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் வேலைகள் நடைபெறும் போது இயற்கை இடர்பாடுகள் மற்றும் விபத்துகள் நடைபெறும் போது அதற்கான முழுப்பொறுப்பிற்கும் ஒப்பந்ததாரரே சார்ந்தவராவார் அதற்கான காப்புறுதி செய்து கொள்ள ஒப்பந்ததாரர் கடமைப்பட்டவராவார்.
5. ஒப்பந்ததாரர் மேற்படி பணியினை பார்வையிட தொழில் நுட்ப உதவியாளரை பணி நியமனம் செய்து கொள்ள வேண்டும்
6. ஒப்பந்ததாரரால் செய்யப்படும் வேலைகள் மற்றும் பொருட்களுக்கு தர நிர்ணய சான்று பேரூராட்சி அலுவலர்களால் கோரும் பட்சத்தில் பெற்றுத்தரப்படவேண்டும் இதற்கான கட்டணம் ஒப்பந்ததாரரையே சாரும்.
7. ஒப்பந்ததாரர் வங்கி உத்திரவாத சான்று பெற்று இணைக்க வேண்டும்.
8. பணிக்கு செலுத்த வேண்டிய டேவணித்தொகை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செலுத்தலாம். அரசால் வெளியிட்ட தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது அரசு கடன் பத்திரம் ஆகியவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. உயிரி அகழ்வு பணியில் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் பெறப்பட்ட அளவுகள் படி பணிகள் மேற்கொள்வதுடன் அதற்கான சான்று பெறப்பட வேண்டும்.

( த.பி.பா)

10. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://townpanchayats.tn.gov.in/tender என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும் மற்றும் https://tntenders.gov.in என்ற தமிழக அரசு இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் செங்கம் பேரூராட்சி என்று முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரர்களின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.
11. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
12. வேலைகளை துவக்குவதற்கு முன்பு, கட்டிடத் தொழிலாளர் நலநிதிக்கு மதிப்பீடு தொகையில் 1% வங்கி வரைவோலை எடுத்து ஒப்படைக்க வேண்டும்.
13. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.50.00 மதிப்புள்ள ஸ்டாம்பு பேப்பரில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும்.
14. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்புகளுக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.
15. பணி முடிக்கப்பட்டு பட்டியல் பெற்றவுடன் விதிமுறைகளின்படி கூடுதல் வைப்பு தொகை, வருமானவரி மற்றும் விற்பனைவரி ஆகியவை பிடித்தம் செய்து பட்டியல் தொகை வழங்கப்படும்.
16. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும்படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.
17. E-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.
18. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த விவரம் அடங்கிய தரமான தகவல் பலகை 4அடி X 2 1/2 அடி அளவில் விளம்பர பலகை நிறுவப்படுதல் வேண்டும்.
19. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.
20. பணிகளை இவ்வலுவலக சுற்றறிக்கைகள் மற்றும் SWM Rules 2016 வழிகாட்டுதலின்படி பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
21. பணி நடைபெறும் பொதுமு ஒவ்வொரு நிலையிலும் செயற்பொறியாளர் மூலம் அளவு சரிபார்க்கப்பட்டு அதன் பின்னரே பட்டியல் தொகை வழங்கப்பட வேண்டும்.
22. மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.

(ஒம்) ம.உமாமகேஸ்வரி
செயல் அலுவலர்,
செங்கம் தேர்வுநிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.

பெறுநர்

பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்கள்,
செங்கம் தேர்வுநிலை பேரூராட்சி.

**நகல் :**

1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சட்டமன்ற உறுப்பினர் செங்கம் தொகுதி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
4. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற் பொறியாளர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
6. இளநிலை பொறியாளர், செங்கம் பேரூராட்சி தலைமையிடம்
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.

8. அலுவலக கோப்புக்கு